**<u>பத்திரிக்கையாளர்கள் நல வாரியம்</u>**

- *அரசு அமைத்துள்ள பத்திரிக்கையாளர்கள் நல வாரிய குழுவில் உள்ள முரண்பாடுகளை களைந்து மாற்றி அமைத்திட வேண்டும்.*
- *திரைப்படத்துறை வாரியம் கலந்திடாத, தன்னிறைவு உடைய தனி அலுவலகம் மற்றும் தனி அலுவலர்களை கொண்ட பத்திரிக்கையாளர்கள் நல வாரியம் செயல்பட வேண்டும்.*
- *அரசு விளம்பர கட்டணத்தில் ஒரு சதவீதம் (1%) மட்டுமல்லாமல், அதற்கு இணையான அரசின் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வாரியத்தின் செயல்பாடுகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.*
- *பத்திரிக்கையாளர்கள் நல வாரியத்தில், தொழிலாளர்கள் நல சட்ட நிபுணர்களையும் இணைத்திட வேண்டும்.*
- *தொழிலாளர்கள் நல வாரியத்தால் யாரெல்லாம் பயன் பெறுவார்கள் என்ற தெளிவு ஏற்படுத்தப்பட்டு அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.*

**<u>அங்கீகாரம்</u>**

- *நிலுவையில் வழங்கப்படாமல் உள்ள அனைத்து அங்கீகார அட்டைகளும் உடனடியாக தரப்பட வேண்டும்.*
- **RNI** *பதிவுபெற்ற அனைத்து தினசரி, வார, மாத பதிப்புகளுக்கும், முறைப்படி பதிவு பெற்ற அனைத்து தொலைக்காட்சி மற்றும் மின்னணு ஊடகவியலாளர்களையும் கணக்கில் கொண்டு; அனைவருக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்கப்பட வேண்டும்.*
- *அரசு அங்கீகார அட்டை வழங்க பெற்றிட,* **E-FILLING** *மட்டும் போதும் எனவும் அச்சகத்தார், ஆடிட்டர் சான்றிதழ் தேவையில்லை எனவும் அறிவிக்க வேண்டும்.*
- *அரசு அங்கீகார அட்டை பெற்றவர்கள் மட்டுமன்றி அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் பாகுபாடின்றி எல்லா நலத்திட்டங்களும் சென்றடைந்திட அரசு வழிவகை செய்யவேண்டும்.*
- *மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணிபுரியும் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் மாவட்ட செய்தித்துறை அங்கீகாரம் வழங்கிட வேண்டும்.*
- *சிறிய நிறுவனம், பெரிய நிறுவனம் என்கிற பாகுபாடின்றி அனைவரையும் அரசும் வாரியமும் ஒன்றாக நடத்திட வேண்டும்.*
- *ஆன்லைன் மின்னணு ஊடகவியலாளர்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.*

**<u>பாதுகாப்பு</u>**

- *பத்திரிக்கையாளர்களின் பணி பாதுகாப்பு நலனை; மத்திய, மாநில அரசுகள் காலதாமதமின்றி சட்டப்பூர்வமாக உறுதி செய்திட வேண்டும்.*
- *அங்கீகார அட்டை உள்ளவர்களுக்கு மட்டும் இல்லாமல்,* **RNI** *பதிவுள்ள அனைத்து ஊடக பணியாளர்களுக்கும், புகைப்பட கலைஞர்களுக்கும், ஊடக அலுவலக பணியாளர்களுக்கும், அரசு செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ள '**<u>மருத்துவ காப்பீட்டு திட்டம்</u>**' கிடைத்திட வழிவகை செய்யப்பட வேண்டும்.*
- *வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் பத்திரிக்கையாளர்கள் பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக இயற்றிட வேண்டும்.*
- *நலிவுற்ற பத்திரிக்கையாளர்களுக்கு அரசின் உதவித் தொகை மிகக் குறைவாக இருப்பதால் அதனை உயர்த்தி வழங்கிட வேண்டும்.*
- *பத்திரிக்கையாளர்களின் குழந்தைகள் படிக்கவும், தொழில் செய்திடவும், வேலையில் சேர்ந்து விடவும்; இட ஒதுக்கீடும், சலுகைகளும் அளித்திட வேண்டும்.*
- *ஊடகவியாளர்கள் மீது தேவையற்ற சட்ட நடவடிக்கைகளை எடுப்பது முற்றிலும் ஒழிந்திட வேண்டும்.*

**<u>வாழ்வாதாரம்</u>**

- *மாநகர பத்திரிக்கையாளர்களுக்கு; அரசின் இலவச அடுக்குமாடி குடியிருப்புகளும், மாவட்டம் மற்றும் தாலுகாவில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு, அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே இலவச வீட்டு மனை அல்லது இலவச வீடுகளை தந்திட வேண்டும்.*
- *அனைத்து ஊடக நிர்வாகங்களும் குறைந்தபட்ச சம்பள விகிதத்தை கடைப்பிடிக்கிறதா என்பதை அரசும், வாரியமும் கண்காணித்து; பத்திரிகையாளர்களுக்கான பணிப்பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்.*
- *பாகுபாடின்றி அதிகபட்ச ஓய்வூதியத்தை நிர்ணயித்து, நடைமுறைச் சிக்கல்களை களைந்து; அனைவரும் பயன்படும் வகையில் ஓய்வூதிய திட்டத்தை அமைத்திட வேண்டும்.*
  *(பி.கு) அருணாச்சலபிரதேசம் ஓய்வூதியமாக ரூ.**25,000/-** அளிக்கிறது.*

**<u>கண்டனம்</u>**

- *உயர் நீதிமன்ற மதுரை கிளையின் இரண்டு நீதிபதிகள் அமர்வு ஆணையிடும் இன்றுவரை செயல்படாமல் உள்ள “பத்திரிகையாளர்களுக்கான வீட்டுமனை” வழங்கும் உத்தரவு உடனடியாக அரசு தலையிட்டு செயல்படுத்தவும், நீதிபதியின் ஆணையை செயல்படுத்த அதிகாரிகளின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்கிறோம்.*